**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ. எண். 106** **நாள்: 28.07.2018**

**சொத்து உரிமையாளர்கள் சொத்து சுய மதிப்பீட்டு விவர அறிக்கை படிவத்தினை 30.07.2018 முதல் 30.08.2018 வரை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சமர்ப்பிக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

சொத்து வரி சீராய்வு தொடர்பாக அரசால் 19.07.2018 மற்றும் 26.07.2018 அன்று வெளியிடப்பட்டுள்ள அரசாணையில், குடியிருப்பு கட்டடங்களுக்கு 50 சதவீதம் மிகாமலும், குடியிருப்பல்லாத கட்டடங்களுக்கு 100 சதவீதம் மிகாமலும், சொத்து வரி சீராய்வு மேற்கொள்ள வேண்டும் எனவும், இச்சீராய்வினை 2018–19ஆம் நிதியாண்டின் முதலாம் அரையாண்டு முதல் அதாவது I/2018–19 முதல் நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும், பெருநகர சென்னை மாநகராட்சி, மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் ஆகியவற்றிற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

அரசாணையின்படி, சொத்து வரி சீராய்வு செய்யும் பணி தொடங்கப்படவுள்ளதால், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து சொத்து உரிமையாளர்களும், தங்களது சொத்து தொடர்பாக சொத்து சுய மதிப்பீட்டு விவர அறிக்கை (Self Declaration Form) தாக்கல் செய்யப்பட வேண்டும்.

குறிப்பிட்ட தேதிக்குள் சொத்து சுய மதிப்பீட்டு விவர அறிக்கை (Self Declaration Form) தாக்கல் செய்யாத மதிப்பீட்டாளர்களின் சொத்துக்கள் ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்களால் மதிப்பீடு செய்யப்பட்டு, உத்தரவளிக்கப்பட்டு, அதனடிப்படையில் சொத்து சுய மதிப்பீட்டு விவர அறிக்கை (Self Declaration Form) மதிப்பிடப்படும்.

சொத்து சுய மதிப்பீட்டு விவர அறிக்கையில் (Self Declaration Form), தாக்கல் செய்துள்ள விவரங்களில் ஏதேனும் வேறுபாடுகள் காணப்படின், வேறுபாடுகள் தொடர்பாக ஆணையாளரால் சொத்து உரிமையாளருக்கு தகுந்த வாய்ப்புகள் வழங்கப்பட்டு, சொத்து உரிமையாளர்களிடம் ஆட்சேபணை கோரப்பட்டு, அதனடிப்படையில், மதிப்பீடு செய்யப்பட்ட காலத்திலிருந்து மறு மதிப்பீடு செய்யப்பட்டு, சொத்து வரி வசூல் செய்யப்படும் என அறிவிப்பு செய்யப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சொத்து உரிமையாளர்கள் கீழ்கண்ட முறைகளில் ஏதேனும் ஒன்றின் மூலம் சொத்து சுய மதிப்பீட்டு

தொடர்பான அறிக்கையினை (Self Declaration Form) சமர்ப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

1) தங்களது பகுதிகளுக்குட்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலகங்கள் / வார்டு அலுவலகங்களில் உள்ள முகப்புகளில் (Counters) உரிய படிவத்தினை (Self Declaration Form) பெற்று, மேற்படி சொத்து சுய மதிப்பீட்டு தொடர்பான அறிக்கையினை பூர்த்தி செய்து சம்மந்தப்பட்ட மண்டல அலுவலகங்கள் / வார்டு அலுவலகங்களில் நேரடியாக சமர்ப்பிக்கலாம்.

2) பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளத்தில் (www.chennnaicorporation.gov.in) சொத்து விவர அறிக்கை படிவத்தினை (Self Declaration Form) பதிவிறக்கம் (download) செய்து சம்மந்தப்பட்ட மண்டல அலுவலகங்கள் / வார்டு அலுவலகங்களில் உள்ள முகப்புகளில் (Counters) நேரடியாக சமர்ப்பிக்கலாம்.

3) பெருநகர சென்னை மாநகராட்சி இணையதள முகவரி (www.chennnaicorporation.gov.in) மூலமாகவும் சொத்து சுய மதிப்பீட்டு விவர அறிக்கையை (Self Declaration Form) Online மூலம் பதிவேற்றம் செய்யலாம்.

சொத்து உரிமையாளர்கள் சொத்து சுய மதிப்பீட்டு விவர அறிக்கை படிவத்தினை (Self Declaration Form) **30.07.2018** முதல் **31.08.2018** வரை மேற்குறிப்பிட்ட வழிமுறைகளின் வாயிலாக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சமர்ப்பிக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**